**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப் பகுதி–03 - 2020**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டப்பகுதி – 03 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 3448 மற்றும் 3449 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தற்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க சேவைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. 29.4 கிலோ மீற்றருடைய கழிவு நீர் வலையமைப்பை இடுவதற்கு மற்றும் 3 உந்தி நிலையங்களை நிர்மாணித்தல் உள்ளடங்கலாக தெற்கு நீர்பிடிப்பு பகுதியின் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் மற்றும் சேவைகள் வழங்குனரின் நிறுவன வியூகத்தையும் திறன் மேம்பாட்டையும் பலப்படுத்தல் இதன் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,401.76 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 112.83 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,471.16 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92.67 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. மிகுதித்தொகையான ரூபா 2,930.60 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 20.16 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 நவம்பர் 03 ஆந் திகதியில் ஆரம்பித்ததுடன் 2022 ஒக்டோபர் 24 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்ட நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டு குறைபாடு | பெறுமதி ருபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களுக்கும் திறைசேரி அச்சுப் பதிவுகளுக்கும் இடையில் ஒட்டுமொத்த கடன் வட்டி மீதான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 81,166,834 | NWSDB இற்கும் திறைசேரிக்கும் இடையில் வட்டி கிரயத்தை மிகவும் நேர்த்தியான முறையில் பிரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் படுவதற்கு முன் வேறுபாட்டை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பது அவசியமாகும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரால் கோரப்பட்ட தாமத சேதங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் இவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 257,171,849 | ஒப்பந்தக்காரருக்கு அவர்கள் விரும்பிய எந்தவொரு தொகைக்கும் உரிமை கோர அவர்களுக்கு உரிமை உண்டு. அதனால் உரிமையாளருக்கு எப்பொழுதும் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற வேண்டும் என்பது அதன் கருத்தல்ல. | இத் தேவைப்பாடு களுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள் விதிகளுக்கு இணங்காமை

| | சட்டங்கள் விதிகளுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் 9.3 ஆம் பிரிவு | வழிகாட்டல் குழு குறைந்தது இரு மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்பட வேண்டும். இருப்பினும் 2020 ஆம் ஆண்டிற்குள் இரண்டு வழிகாட்டல் குழு கூட்டங்கள் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. | 2020 மார்ச் மாதத்திலிருந்து காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கூட்டங்களை ஒழுங்குபடுத்துவது, கொவிடை தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டல்களை மீறுவதாக அமைவதால் சாத்தியமில்லாததாக காணப்பட்டது. | மாற்றுவழியாக நிகழ்நிலை கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ | பொது சேவைக்கு புறம்பாக உதவி பதவியணியினர்களின் ஆட்சேர்கப்பட்டவர்களின் | இந்த சம்பளத் திட்டத்தின் அடிப்படையிலேயே நியமனங்கள் | சட்டங்கள் விதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சேவைகள் சுற்று நிருபத்தின் 4.2.3 ஆம் இலக்க பந்தி | சம்பளம் பொது சேவையில் ஆட்சேர்க்கப்பட்ட இத்தகையோரின் சம்பளத் திட்டம் ஆரம்பபடி நிலைக்கு இணையாக காணப்பட வேண்டும். இருந்த போதிலும் 2011 இல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட தரவுப் பதிவாளருக்கு MN1-2006 சம்பளத் திட்டத்தில் வைப்பதற்கு பதிலாக சிரேஷ்ட மட்ட D நிலையில் வைக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்டதுடன் அதற்கிணங்கவே கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் | | கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட செயல் முன்னேற்றம் சதவீதம் | அடைந்த செயல் முன்னேற்றம் சதவீதம் | | |
| (அ) கிருலப்பனை நீர்பிடிப்பு பகுதிக்கு புதிய ஈர்ப்பு கழிவு நீர் வேக பிரதானிகள் மற்றும் பம்ப் நிலையங்கள் வழங்குதல் | கிருலப்பனை நீர்பிடிப்பு பகுதிக்கு புதிய ஈர்ப்பு கழிவு நீர் வேக பிரதானிகள் மற்றும் பம்ப் நிலையங்கள் வழங்குதல் | 100 | 54 | ஒப்பந்தக்காரரின் குறைவான பௌதீக முன்னேற்றம், வளங்களை அணி திரட்டாமை, மற்றும் மோசமான திட்டமிடலும் தாமதத்திற்கு காரணமாக இருந்ததுடன் தலாக்கொட்டுவ தோட்ட காணியை ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைப்பதிலும் ஏற்பட்ட தாமதம் | ஒப்பந்தக்காரரின் குறைவான பௌதீக முன்னேற்றம், வளங்களை அணி திரட்டாமை மற்றும் மோசமான திட்டமிடல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | வள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல் | வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல் | 100 | முன் ஒப்பந்த கட்டம் 75 | விலைமனுதாரர்களாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் (ADB) பெறப்பட்ட பல தெளிவுபடுத்தல்களினால் ஏற்பட்ட தாமதங்களும் ஒரு வருடமாக ADB இணக்கப்பாடு மற்றும் அமைச்சரவை ஒப்புதலுக்கிடையில் ஏற்பட்ட தாமதம் அவதானிக்கப்பட்டது | அனுமதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் |
| (இ) | கிருல நாரஹேன்பிட்ட பகுதிக்கு கழிவு நீர் வசதிகளை வழங்குதல் | கிருல நாரஹேன்பிட்ட பகுதிக்கு கழிவு நீர் வசதிகளை வழங்குதல் | 100 | முன் ஒப்பந்த கட்டம் 75 | இரண்டு உந்து நிலையங்களை நிர்மாணிப்பதற்கான காணிகள் கிடைக்கப்பெறாமை தாமதத்திற்கு காரணமாக இருந்ததுடன் இத்தாமதமே விலைமனு ஆவணங்களை தயாரிப்பதற்கும் செல்வாக்கு செலுத்தியிருந்தது. விலைமனு ஆவணங்களுக்கான EIB யின் இணக்கப்பாடு 2020 நவம்பர் 18 ஆந் திகதியில் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டது. | காணிகள் கிடைக்கப் பெறாமையும் விலை மனு செயன்முறையில் ஏற்பட்ட தாமதமும் |
| (ஈ) | தெற்கு நீர் பிடிப்பு பகுதியின் குறைபாடுள்ள கழிவுநீர்களை பழுதுபார்த்தல் மற்றும் செயல்படுத்துவதில் குறைந்த திறன் கொண்ட கழிவு நீர்களை மேம்படுத்தல். | தெற்கு நீர் பிடிப்பு பகுதியின் குறைபாடுள்ள கழிவுநீர்களை பழுதுபார்த்தல் மற்றும் செயல்படுத்துவதில் குறைந்த திறன் கொண்ட கழிவு நீர்களை மேம்படுத்தல். | 100 | முன் ஒப்பந்த கட்டம் 75 | கொள்கை மட்டத்தில் குறைந்த பட்ச முன்னுரிமை வழங்கியதில் ஏற்பட்ட தாமதமும் கொள்கை மட்டத்தில் ஒப்பந்தத்தின் நோக்கத்தை முடிவு செய்யாமையுமாகும். விலைமனு ஆவணங்களுக்கான ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் (EIB) இணக்கப்பாடு 2020 | கொள்கை மட்டத்தில் குறைந்தபட்ச முன்னுரிமையும் ஒப்பந்தத்தின் நோக்கத்தை முடிவு செய்யாமையும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | நவம்பர் 18 ஆந் திகதியில் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டது. | |
| (உ) | பொல்வத்தை உந்த நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி வரையான 1200 மில்லி மீற்றர் தண்டுடைய கொங்கிறீட் கழிவு நீர் நிர்மாணித்தல் | பொல்வத்தை உந்த நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி வரையான 1200 மில்லி மீற்றர் தண்டுடைய கொங்கிறீட் கழிவு நீர் நிர்மாணித்தல் | 100 | தவிர்க்கப் பட்டது. | போதியளவு நிதிகள் இன்மை மற்றும் கடல் நகர் மீட்பு நில திட்டத்துடன் எதிர்பார்க்கப்படும் நோக்கம் மாற்றப்பட்டுள்ளதால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. | போதியளவு நிதிகள் இன்மை |
| (ஊ) | சேவை வழங்குனரின் வல்லமை, மற்றும் நிறுவன கட்டமைப்பு மற்றும் சக்தி | (அ) CMC பகுதியில் கழிவு நீர் அலகொன்றை அமைத்தல்.<br><br>(ஆ) GIS ஐ அடிப்படையாகக் கொண்ட சொத்து முகாமைத்துவ முறைமையை ஆரம்பித்தல்.<br><br>(இ) CMC பதவியணியினர் மற்றும் நிறுவன வல்லமையை பலப்படுத்தல்.<br><br>(ஈ) குடிமக்கள் மத்தியில் கழிவு நீர் கட்டணத்தை பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் பொறுப்பை பகிர்ந்து கொள்ளல். | 100 | 29 | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வில்லை. | கொள்கை மட்டத்தில் மோசமான திட்டமிடல் மற்றும் குறைந்த பட்ச முன்னுரிமை வழங்கியமை. |

(உ) பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு (CMC யின் வடிகால் பிரிவு)

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | கிருலப்பனை நீர்ப்பிடிப்பு பகுதிக்கான வளங்களை திரட்டாமை மற்றும் மோசமான திட்டமிடல் ஆகியவை புதிய ஈர்ப்பு கழிவு நீர், வேக பிரதானிகள் மற்றும் உந்தி நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தில் குறைந்த பௌதீக முன்னேற்றம் மற்றும் குறைந்த நிதி விநியோகத்தை ஏற்படுத்தியுள்ளன. ADB யின் இணக்கப்பாடு கிடைத்த பின்னர் பல்வேறு காரணங்களினால் ஒரு வருட தாமதம் ஏற்பட்டது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | செயற்திட்ட காலம் காலாவதியாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்கய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **கிருலப்பனைக்கு கழிவு நீர் வலையமைப்பு மற்றும் 2 உந்தி நிலையங்களை அமைத்தல்** | | |
| (i) | 2017 மே 4 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் உண்மையாக முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி 2020 மே 04 ஆகும். இரண்டு உந்து நிலையங்களை நிர்மாணிப்பதற்கு இந்த ஒப்பந்தத்தின் இரண்டு காணிகள் தேவையாகும். எவ்வாறாயினும் 2020 யூன் 08 ஆந் திகதியில் தலாகொட்டுவ காணி ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டது. | கூறப்பட்ட மூன்று குடும்பங்களையும் அகற்றுவதற்கு போதியளவு காலம் எடுக்கப்பட்டது. | செயற்திட்ட காலம் காலாவதி யாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்து வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ii) | எவ்வாறாயினும் தளமொன்று கிடைக்கப் பெறாததன் காரணமாக ஏற்பட்ட தாமத சேதங்களை ஈடு செய்வதற்காக ரூபா 257,171,849 வுக்கான கோரிக்கையொன்று 2019 ஒக்டோபர் 14 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் விடுக்கப்பட்டது. | ஒப்பந்தக்காரருக்கு அவர்கள் விரும்பிய எந்தவொரு தொகைக்கும் உரிமை கோர அவர்களுக்கு உரிமை உண்டு. அதனால் உரிமையாளருக்கு எப்பொழுதும் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற வேண்டும் என்பது அதன் கருத்தல்ல. | |
| (iii) | செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் P.M.U சாத்தியவள ஆய்வு | விபரமான வடிவமைத்தலோ அல்லது விலைமனு ஆவணங்களை தயாரிப்பதில் | |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையின் விபரமான திட்டங்களின் தாமதத்தின் காரணமான பெறுகை நடவடிக்கைகளின் தாமதத்தின்ால் 2020 பெப்ரவரி 10 ஆந் திகதி காணி கொள்வனவிற்காக பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடான ரூபா 9,840,400 (60%) மேலதிகமாக கூடுதலாக ரூபா 25,000,000 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்பட்ட தாமதங்களோ காணி கொள்வனவுக்கான காரணத்திற்கு தொடர்பற்றதாகும். | |
| (ஆ) | **வெள்ளவத்தை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை நிர்மாணித்தல்**<br>---------------------------------------------- | | |
| | ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் செயற்படுத்தல் திட்டத்திற்கமைய, ஒப்பந்தம் 2017 இன் 2 ஆம் காலாண்டு பகுதியில் வழங்க நிரற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தம் 2020 திசெம்பர் 18 இல் வழங்கப்பட்டுள்ளது. | சுத்திகரிக்கப்பட்ட கடல்நீரை கடற் சுற்றுச்சூழலுக்கு அகற்றுவதற்கான CEA வழிகாட்டி விலைமனு ஆவணங்களை முடிவு செய்வதற்கு, எதிர்பார்த்ததை விட அதிக காலம் செலவானது மீட்டலில் ஏற்பட்ட காரணமாகும். | செயற்திட்ட காலம் காலாவதி யாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்து வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (இ) | **கிருல நாரஹேன்பிட்ட பகுதிக்கு கழிவு நீர் வசதிகளை ஏற்படுத்தல்**<br>---------------------------------------------- | | |
| (i) | ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் செயற்படுத்தல் திட்டத்திற்கமைய நிர்மாணப் பணிகள் 2018 இல் முடிவடைந்திருக்க வேண்டிய போதிலும் விலைமனு ஆவணங்களுக்கான EIB யின் இணக்கம் 2020 நவம்பர் 18 ஆந் திகதியில் கிடைக்கப் பெற்றிருந்தது. | இரண்டு உந்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கான காணிகள் இல்லாமையின் காரணமாக செயற்திட்டமானது கிருல நாரஹேன்பிட்ட வலையமைப்பில் வடிவமைப்பு மாற்றங்கள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டன. விலை மனு ஆவணங்களை தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் பிரதானமானதுடன் ஒட்டுமொத்த பெறுகை நடைமுறைகளையும் தாமதமாக்கியது. | செயற்திட்ட காலம் காலாவதி யாவதற்கு முன்னர் செயற்திட்ட செயற்பாடுகளை முடிவுறுத்து வதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ii) | இரண்டு உந்தி நிலையங்களுக்குமான காணி இல்லாமையினால் வடிவமைத்தல் பல தடவைகள் மாற்றத்திற்குள்ளானது. | | |
| (ஈ) | **பொல்வத்தையிலிருந்து பம்பலப்பிட்டிய வரை தண்டு கழிவு நீர் நிர்மாணித்தல்**<br>---------------------------------------------- | | |
| | போதியளவு நிதிகள் இன்மை மற்றும் கடல் நகர மீட்பு | அபிவிருத்தி கொள்கைகள் நேரத்திற்கு நேரம் | முறையாக செயற் திட்டங்களை |

| | | |
|---|---|---|
| நிலத்திட்டத்துடன் எதிர்பார்க்கப்படும் நோக்கம் மாற்றப்பட்டுள்ளதால் 1200 மில்லிமீற்றர் தண்டுடைய கொங்கிறீட் நிர்மாணப் பணிகள் இரத்துச் செய்யப்பட்டது. | மாற்றமடைவதனால் இவ்வகையான கிரயம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. | திட்டமிடுவதன் மூலம் இவ்வாறான கிரயங்கள் குறைக்கப்பட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்கய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2017 மே 15 ஆந் திகதி முதல் 2020 நவம்பர் 15 ஆந் திகதி வரையான வழங்கப்படாத OCR கடன் மீதிக்கான அர்ப்பணிப்பு கட்டணமாக ரூபா 121,116,614 வை பொது திறைசேரியால் செலுத்தப்பட்டது. | அர்ப்பணிப்பு கட்டண கிரயம் தவிர்க்க முடியாததொன்றாகும். கடன் வழங்கப்பட்டதில் ஏற்பட்ட தாமதத்தால் மேலதிக கிரயம் ஏற்பட்டது ஏற்றுக் கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் செலுத்தப்பட்ட அர்ப்பணிப்பு கட்டணங்கள் வரம்பை வரையறைப்படுத்தவோ அல்லது செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைவதையோ பாதிக்கவில்லை. | முறையாக செய்திட்டத்தை திட்டமிடுவதன் மூலம் இவ்வாறான கிரயங்கள் குறைக்கப்பட வேண்டும். |

### 3.4 சுற்றாடல் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் சுற்றாடல் உத்தியோகத்தரின் பதவி 2018 ஒக்டோபர் 22 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. 2020 திசெம்பர் 31 வரையிலும் இவ்வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | ஒரு பொருத்தமான நபரை பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளும் செயற்திட்டத்தினால் எடுக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களினால் இது வெற்றியளிக்கவில்லை. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சூழல் உணர் திறன் ஆனதால் இத்தேவைப்பாடு கட்டாயமானது. ஆதலால் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவரை தாமதமின்றி ஆட்சேர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| தொழில் நிலைகள் | பதவிகளின் எண்ணிக்கை | | | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளர் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ அலகு | அனுமதிக்கப்பட்டது | 2020 திசெம்பர் 31 இல் உண்மையான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | | |
| செயற்திட்ட துணை பணிப்பாளர் செயற்திட்ட | 02 | 01 | 01 | செயற்திட்டத்தின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை | தகுதியான பதவியணியினர் 19 க்கான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொறியியலாளர் (பெறுகை) | 01 | - | 01 | செயற்திட்டத்தின் நாளாந்த செயற்பாடுகளை கடுமையாக பாதிக்கும் என்பது உண்மையாகும். | வெற்றடங்களை நிரப்புவதற்கான துரித நடவடிக்கைளடுக்கப்பட வேண்டும். |
| செயற்திட்ட பொறியியலாளர் | 09 | 02 | 07 | | |
| சுற்றாடல் அதிகாரி | 01 | - | 01 | | |
| செயற்திட்ட செயலாளர் | 02 | 01 | 01 | | |
| செயற்திட்ட உதவி பொறியியலாளர் | 08 | 03 | 05 | | |
| முகாமைத்துவ உதவியாளர் | 05 | 03 | 02 | | |
| கட்டுமான பணி முகாமையாளர் | 02 | 01 | 01 | | |
| **மொத்தம்** | **30** | **11** | **19** | | |